DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 291/2017

List of Witness : Lw11

Prosecution Witness : PW11

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ராஜா | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | வடிவு | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 03/07/2026

(எதிரிகள் 1,4 முதல் 7, 9 ஆஜர். எதிரி 3 ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரியின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் மதுரையில் குடியிருந்து வருகிறேன். 30.05.2019 ஆம் தேதி விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் உட்கோட்டத்தில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வில் உள்ளேன். இதற்கு முன்பு ஒட்டன்சத்திரம் காவல் துணை கண்காணிப்பாளராக இருந்த போது அம்பிளிக்கை காவல் நிலைய குற்ற எண் 102/2016 பிரிவு 147,323,294(b) இதச வழக்கினை இதற்கு முன்பு அம்பிளிக்கை காவல் நிலைய பெண் உதவி ஆய்வாளர் ராதா அவர்கள் 16.05.2016 ஆம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததை மேல் விசாரணைக்காக திரு. கபிலன் உதவி துணை காவல் கண்காணிப்பாளர் உட்கோட்டம் முறையே விசாரித்து சம்பவ இடங்களை பார்வையிட்டும் சாட்சிகளை விசாரித்தும் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார். இந்த வழக்கின் எதிரிகள் கடந்த 14.11.2016 ஆம தேதி இந்நீதிமன்றத்தில் சரண் அடைந்து உரிய ஜாமீன்தார்களை நிறுத்தி பிணையில் சென்றுவிட்டார்கள். மேற்படி வழக்கு கோப்பினை 20.11.2016 ஆம் தேதி எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு கோப்புகளை சரிபார்த்தும், மேற்படி வழக்கின் தன்மைக்கு ஏற்ப புலன் விசாரணை செய்ததால் மேற்படி சாட்சிகள் முதற் கட்ட விசாரணை செய்த துணை காவல் கண்காணிப்பாளர் கபிலன் அவர்கள் சாட்சிகளின் வாக்குமூலங்களை பதிவு செய்து இருந்ததால் நான் சாட்சிகளின் வாக்கு மூலத்தை பதிவு செய்யவில்லை. கடந்த 20.11.2016 ஆம் தேதி மேற்படி வழக்கில் காயம்பட்டவருக்கு ஒட்டன்சத்திரம் சி.எப். மருத்துவமனை மருத்துவர் கிறிஸ்டோபர் அவர்களிடம் காயச்சான்று பெற்று

வாக்குமூலம் பதிவு செய்தும் அன்றைய தேதி எதிரிகள் மீது பிரிவுகள் 147,323,294(b) இதசவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) நான் சம்பவ இடம் சென்று விசாரணை செய்தேனா என்றால் இல்லை. எனக்கு முன்பு இருந்த அதிகாரிகள் முதற்கட்ட விசாரணையில் சம்பவ இடம் சென்று வரைபடங்கள் வரைந்து போதுமானளவு விசாரணை செய்து இருந்தார்கள் என்று வழக்கு கோப்பை பார்த்து தெரிந்து கொண்டேன். புகார்தாரரும், இந்த வழக்கின் எதிரிகளும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எதிரிகள் 8,9 புகார்தாரரை குச்சியால் தாக்கியதாக சொல்லப்படும் நிலையில் அந்த குச்சியை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் எதிரிகள் எந்த கட்சியை சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. எனது புலன் விசாரணையில் புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் இடையே முன்விரோதம் இருந்த விவரம் தெரியவந்ததா என்றால் முன்விரோதம் எதுவும் இல்லை, ஓட்டு போட வந்தபோது டி.எம்.கே. காரங்க ஓட்டு போட வேண்டாம் என்று சொன்னதால் பிரச்சனை.

2) இந்த வழக்கில் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 நெருங்கிய உறவுக்காரர்கள் என்றால் சரியல்ல, உள்ளூரை சேர்ந்தவர்கள். தனிப்பட்ட சாட்சிகளை விசாரித்து சாட்சி பட்டியலில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி சண்முகவேலின் துண்டுதலின் பேரில் தான் மறற் எதிரிகள் புகார்தாரரை தாக்கியதற்கான ஆதரங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையில் புகார்தாரரை எதிரி சண்முகவேலின் துண்டுதலின் பேரில் தான் மறற் எதிரிகள் புகார்தாரரை தாக்கியதாக எனது புலன் விசாரணையில் தெரியவந்தது. முதல் தகவல் அறிக்கை ஆறு மாத கால தாமதத்துடன் தான் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் முதற்கட்ட புலன் விசாரணை செய்த உதவி பெண் ஆய்வாளரை கேட்டால் தான் தெரியும். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும், சம்பவத்தை வேடிக்கை பார்த்த நபர்களை எதிரிகளாக புனைந்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் சம்பவத்தை குறித்து சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.07.03 17:36:27 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 03/07/2026